

# SIVAPURANAM
## MISSION

www.Sivapuranam.in

திருச்சிற்றம்பலம்

# 44. எண்ணப்பதிகம்

(தில்லையில் அருளியது)

ஒழியா இன்பத்து உவகை

(ஆசிரிய விருத்தம்)



# திருச்சிற்றம்பலம்



பார்உரு ஆய பிறப்புஅறவேண்டும்
பத்திமையும் பெற வேண்டும்
சீர்உரு ஆய சிவபெருமானே
செங்கமல மலர் போல்
ஆர்உரு ஆயஎன் ஆரமுதேஉன்
அடியவர் தொகை நடுவே
ஓர்உரு ஆய நின்திருவருள் காட்டி
என்னையும் உய்யக் கொண்டருளே

1





உரியேன் அல்லேன் உனக்கு அடிமை
உன்னைப் பிரிந்து இங்கு ஒருபொழுதும்
தரியேன் நாயேன் இன்னது என்று
அறியேன் சங்கரா கருணையினால்
பெரியோன் ஒருவன் கண்டுகொள்
என்றுஉன் பெய்கழல் அடிகாட்டிப்
பிரியேன் என்றுஎன்று அருளிய அருளும்
பொய்யோ எங்கள் பெருமானே





என்பே உருக நின்அருள் அளித்துஉன்
இணைமலர் அடி காட்டி
முன்பே என்னை ஆண்டுகொண்ட
முனிவா முனிவர்முழுமுதலே
இன்பே அருளி எனை உருக்கி
உயிர் உண்கின்ற எம்மானே
நண்பே அருளாய் என் உயிர்
நாதா நின்அருள் நாணாமே

3





பத்துஇலன் ஏனும் பணிந்திலன் ஏனும்
உன்உயர்ந்த பைங்கழல் காணப்
பித்துஇலன் ஏனும் பிதற்றிலன் ஏனும்
பிறப்பு அறுப்பாய் எம்பெருமானே
முத்து அனையானே மணி அனையானே
முதல்வனே முறையோ என்று
எத்தனை யானும் யான் தொடர்ந்து உன்னை
இனிப் பிரிந்து ஆற்றேனே

4





காணும் அதுஒழிந்தேன் நின்திருப்பாதம்
கண்டு கண் களிகூரப்
பேணும் அதுஒழிந்தேன் பிதற்றும்
அதுஒழிந்தேன் பின்னை எம்பெருமானே
தாணுவே அழிந்தேன் நின்நினைந்துருகும்
தன்மை என் புன்மைகளால்
காணும் அதுஒழிந்தேன் நீ இனி
வரினும் காணவும் நாணுவனே





பால் திருநீற்று எம்பரமனைப்
பரங் கருணையோடும் எதிர்ந்து
தோற்றி மெய் அடியார்க்கு அருள்துறை
அளிக்கும் சோதியை நீதி இலேன்
போற்றி என்அமுதே எனநினைந்து ஏத்திப்
புகழ்ந்து அழைத்து அலறி என்னுள்ளே
ஆற்றுவன் ஆக உடையவனே எனை
ஆவ என்று அருளாயே



ஸ்ரீ மாணிக்கவாசகர்